ஊருக்கு நல்லது

இது, "தம்பீ வா" என்ற
புத்தகத்தைப் படித்து
முடித்தவர்களுக்கு
ராஜாஜீயும்
சந்தானமும்
எழுதிய
இரண்டாம் புத்தகம்

ராக்ஹவுஸ் அண்டு ஸன்ஸ், லிமிடெட்
எஸ்பிளனேட் : : மதராஸ்

ஊருக்கு நல்லது

எனக்குப் படிக்கத் தெரியும். படிக்கத் தெரியாதவனை அழைத்து, படிக்கக் கற்றுக் கொடுப்பேன்.

முதலில் சிறிய புத்தகம் படி, பிறகு நீயாகவே எதையும் படிப்பாய்—என்று சொல்லுவேன்.

திண்ணைகளெல்லாம் சின்னச் சின்ன பள்ளிக் கூடங்களாகவேண்டும்.

படிக்கத்தெரிந்த எவனும் சும்மா இருக்கக் கூடாது. மற்றவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும்.

௰

உழைப்பு தேகத்திற்கு பலம் கொடுக்கும். உழைப்பைப் போலவே விளையாட்டும் வேடிக்கையுங்கூட அவசியம். உழைப்பும் உற்சாகமும் நிறைந்த ஊர் எல்லா விதத்திலும் செழிக்கும்.

ஒழிந்த வேளைகளில் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். புழக்கடையில் இடம் இருந்தால் காய் கறித் தோட்டம் போடலாம்.

தேன்கூடு வைத்து வளர்க்கலாம். நூல் நூற்கலாம், கீத்து முடையலாம், கயிறு திரிக்கலாம். இன்னும் பல வேலைகள் உண்டு. எதையாவது உண்டாக்கவேண்டும். காலத்தை வீணுக்கக் கூடாது.

நோய்களுக்குக் காரணம் அழுக்கு. உடம்பும் துணியும் அழுக்கு இல்லாமல் வைத்துக் கொள்ளவேண்டும்.

வீட்டையும் வாசலையும் புழக்கடையையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஊரின் சுத்தத்தையும் நாம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

குப்பையும் மலமும் கண்ட இடத்தில் போடக்

கூடாது. போட்டால் காற்றைக் கெடுத்துவிடும். குறிப்பிட்ட இடத்தில் குழி தோண்டி அதிலேயே போட வேண்டும்.

இப்படிச் செய்தால் அது நல்ல உரமாகும். அதை வயலில் போட்டு உழுதால் நல்ல பயிர் உண்டாகும்.

வீட்டிலுள்ள அழுக்கைத் தெருவில் போடுவது நமக்கும் நஷ்டம், மற்றவர்களுக்கும் கஷ்டம்.

அரிசியை அதிகம் தீட்டுவதால் அதன் சத்து போய் விடுகிறது. மில் அரிசியில் சத்து இல்லை. குத்தின அரிசி தான் சாப்பாட்டுக்கு உபயோகப் படுத்தவேண்டும்.

உலக்கைக்குப் பதில் சில ஊர்களில் ஏற்றம்போல் ஒரு யந்திரம் அமைத்து மிதித்துக் குத்துவது உண்டு.

அப்படிச் செய்வதினால் கை உலக்கையைக் கொண்டு உரலில்

குத்துவதைவிட அதிகமாகக் குத்தலாம்.

II

கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானியங்களை ஒரு வேளையாவது போஜனத்தில் சேர்த்துக்கொண்டால் தேகத்திற்கு பலம் உண்டாகும்.

தேக ஆரோக்கியத்திற்குப் பாலோ, தயிரோ, அல்லது மோரோ, சாப்பாட்டில் சேரவேண்டும்.

2

சாதாரணமாகக் காய் கிழங்குகளை வேகவைத்துக் குழம்பு கறி யாக்கிச் சாப்பிடுகிறோம்.

சில காய் கிழங்குகளைப் பச்சையாகவே சாப்பிடலாம். அவைகளைப் பச்சையாகச் சாப்பிடுவதே தேகத்திற்கு நல்லது.

அழுக்கடைந்த ஜலம் குடிப்பதால் பல வியாதிகள் உண்டாகும்.

குடி தண்ணீருக்கு உப யோகப்படும் கிணற்றில் யாரும் கால் வைக்கக் கூடாது. அதில் துணி தோய்க்கக்கூடாது. அழுக்குப் பட்ட பாத்திரத்தை விட்டு ஜலம் மொள்ளக் கூடாது.

ஆற்றுக்கும் குளத்துக்கும் பக்கத்தில் மல ஜலம் கழிப்பது பெரும் பாவம்.

இப்படிச் செய்வதால் நரம்புச் சிலந்தி, காலரா, சீத

பேதி முதலிய வியாதிகள் உண்டாகும்.

அழுக்கானது தண்ணீருக்குள் கலந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போகும். ஆனாலும் அது வியாதியை உண்டாக்கும்.

ஊர் தெருக்களில் அல்லது நடக்கும் பாதைகளில் மல ஜலம் கழிப்பது அநாகரிகம். மறைவான இடங்களில் இருந்து கழிக்க வேண்டும். துர்நாற்றம் உண்டாகாதபடி உடனே

மண்ணைப்போட்டு மூடி விடவேண்டும்.

ஒவ்வொருவரும் இந்த ஆசாரத்தை அனுசரித்து ஊரின் நாகரீகத்தையும் ஆரோக்கியத்தையும் காப் பாற்றவேண்டும்.

குழந்தைகளும் இவ்வாறு செய்யும்படி சொல்லித் தர வேண்டும்.

நம்முடைய வீடும் நம் முடைய ஊரும் அழகாக இருக்கவேண்டும்.

சாப்பிடும் சாமான்களின் பேரில் ஈக்கள் உட்கார விடக்கூடாது. மூடிவைக்க வேண்டும்.

கண்ட இடங்களில் ஈ உட்காருவதால் அதன் கால்களிலும் அதற்கிருக்கும் சிறு தும்பிக்கையிலும் வியாதிப் புழுக்கள் படிந்த அழுக்கு இருக்கும்.

அது கண்ணுக்குத் தெரியாது. ஆனால் அது நாம் உண்ணும் பண்டங்களில் சேர்ந்தால் வியாதி பரவும்.

சாக்கடை ஜலம் முதலிய அசுத்தமான நீரைத் தேங்கி நிற்க விடக் கூடாது. அதை உடனே தோட்டத்திற்கு உபயோகித்து விட வேண்டும். அல்லது புது மண்ணோடு நன்ருகக் கலந்து வெயில் பட்டு உலர்ந்து போகச் செய்யவேண்டும்.

தேங்கி நிற்கும் ஜலத்தில் கொசுக்கள் வளரும். அவை நம்மைக் கடித்து, பல

வியாதிகளை ஒருவரிடமிருந்து இன்னொருவர் உடலில் புகுத்தும்.

ஆகையால் கொசுக்கள் விருத்தியாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதற்கு முக்கியமாக வீட்டுக்குப் பக்கத்தில் எங்கேயும் ஜலம் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

உடுக்கும் துணிகளை தின
மும் தோய்த்து வெயிலில்
உலர்த்தி சுத்தமாக வைத்
துக்கொள்ள வேண்டும்.

ஒருவன் துணியை மற்
ெருருவன் உடுத்துவது
பிசகு. உடுக்கும் துனிகளைப்
போலவே படுக்கைத் துணி
களையும் சுத்தமாக வைத்
துக் கொள்ளவேண்டும்.

அவைகளை காற்றும்
வெயிலும் படும் படியாக

3

அடிக்கடி வெளியில் போட வேண்டும். கூடியவரை தோய்க்கவும் வேண்டும்.

வீடுகளுக்குச் சுண்ணாம்பு அடிப்பது மிகவும் நல்லது. வீட்டில் மூலை முடுக்குகளில் தூசி குப்பை தங்காமல் பார்த்து வருவது நாகரீகம்.

வீட்டிலுள்ள சாமான்கள் கண்டபடி கிடக்க விடக்கூடாது. ஒழுங்காக வைக்கவேண்டும்.


அளவுகள்

ஒரு அடியைப் பன்னிரண்டு பாகமாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகத்திற்கு ஒரு அங்குலம் என்று பேயர். ஆகையால் பன்னிரண்டு அங்குலம் ஒரு அடி. ஒரு சாண் நீளத்தில் ஒன்பது அங்குலம் இருக்கும். ஒரு முழத்தில் பதினெட்டு அங்குலம் இருக்கும். மூன்று அடி நீளம் ஒரு கெஜம். ஒரு மைலுக்கு 1760 கெஜம்.


நிலப் பரப்பு அல்லது மரப் பலகை முதலியவைகளை சரியாக அளவிட நீளம், அகலம் இரண்டையும் கவனிக்கவேண்டும்.

ஒரு அடி நீளம் ஒரு அடி அகலம் கொண்ட பரப்புக்கு ஒரு சதுர

அடி என்று பெயர். இரண்டு அடி நீளம் இரண்டு அடி அகலத்தில் நான்கு சதுர அடி இருக்கிறது. இதைக் கீழே பாருங்கள்.



ஒரு சதுர கெஜத்தில், மூன்று அடி நீளம் மூன்று அடி அகலம். ஆகையால் ஒரு சதுர கெஜத்தில் ஒன்பது சதுர அடி சேரும்.



நிலம் எப்போதும் நேர் வடிவம் கொண்டதாக இருக்காது. ஒரே பரப் பளவு கொண்ட இரண்டு வயல்களில் வடக்கு-தெற்கு அளவு அதிகமாகக் கொண்ட வயலின் கிழக்கு-மேற்கு அளவு குறைந்திருக்கும்.

ஒரு ஏகரா என்ருல் என்ன ?

நல்ல சதுரமான வடிவம் கொண்ட ஒரு ஏகரா நிலத்தை வரப்புப்போட்டு பத்து சமபாகமாகப் பிரித்தால், ஒவ் வொரு வயலும் 22 கெஜம் நீளமும், 22 கெஜ அகலமும் உள்ளதாகும்.

கன அளவு என்ருல் கிணறு அல்லது குழி வெட்டும் கணக்கு. 4 அடி நீளம், 5 அடி அகலம், 2 அடி ஆழம் வெட்டினுல், மூன்றையும் பெருக்கி, 40 கன அடி ஆகும்.

6 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழம் வெட்டினுல், 54 கன அடி ஆகும்.

குழி பறித்து எடுத்த மண்ணுக்கும் இவ்வாறே கணக்கு.

அணு ஒன்றுக்குப் பன்னிரண்டு பைசா, பதினுறு அணு ஒரு ரூபாய் என்பது எல்லாருக்கும் தெரியும்.

ஒரு ரூபாய் எடை	ஒரு தோலா
மூன்று தோலா	ஒரு பலம்
எட்டு பலம்	ஒரு சேர்
ஐந்து சேர்	ஒரு வீசை
எட்டு வீசை	ஒரு மணங்கு
இருபது மணங்கு	ஒரு பாரம்

தமிழ் நாட்டில் ஒரு சேர் என்ருல் 24 ரூபாய் எடை; வட நாட்டில் 80 ரூபாய் எடையை ஒரு சேர் என்பார்கள்.

ஆகையால் வட நாட்டுச் சேர் ஒன்றுக்கு நம்முடைய சேர் மூன்று ஆகி எட்டு தோலா கூடவும் இருக்கும். வட நாட்டு சேர்தான் ரயில் கணக்கு.

60 விநாடி கொண்டது ஒரு நிமிஷம்
60 நிமிஷம் கொண்டது ஒரு மணி

இரவு 12 மணி
பகல் 12 மணி

ஆக ஒரு நாளில் 24 மணி

ஒரு வருஷத்தில்	365 நாட்கள்
ஜனவரி மாதம்	31 நாட்கள்
பிப்ரவரி மாதம்	28 நாட்கள்
மார்ச்சு மாதம்	31 நாட்கள்

ஏப்ரல் மாதம்	30 நாட்கள்
மே மாதம்	31 நாட்கள்
ஜூன் மாதம்	30 நாட்கள்
ஜூலை மாதம்	31 நாட்கள்
ஆகஸ்டு மாதம்	31 நாட்கள்
செப்டம்பர் மாதம்	30 நாட்கள்
அக்டோபர் மாதம்	31 நாட்கள்
நவம்பர் மாதம்	30 நாட்கள்
டிசம்பர் மாதம்	31 நாட்கள்

ஆக 12 மாதங்களில் 365 நாட்கள்

இது ரோமானியா பஞ்சாங்க முறை. இதுவே இப்போது வழங்கும் அரசாங்க முறை.

தமிழ் வருஷத்திலும் 12 மாதங்கள்

சித்திரை	வைகாசி	ஆனி
ஆடி	ஆவணி	புரட்டாசி
ஐப்பசி	கார்த்திகை	மார்கழி
தை	மாசி	பங்குனி

ஒரு மாதத்தில் உள்ள தனித் தனி நாட்களுக்குத் தேதி என்று பெயர்.

வெள்ளைக்காரருடைய வருஷம் ஜனவரி முதல் தேதியில் ஆரம்பம். தமிழ் வருஷம் சித்திரை முதல் தேதி யில் ஆரம்பம். வெள்ளைக்காரர் வருஷ ஆரம்பம் அநேகமாகத் தமிழ் மார்கழி பதினெட்டோடு சேரும்.

வைத்தியர்கள் ஒரு சிறு கண்ணா டிக் குழாய் வைத்திருப்பார்கள். அந் தக் குழாயில் கோடுகள் கீறப்பட்டிருக் கும். உள்ளே பாதரஸம். உடலின் சூடுபட்ட உடன் குழாய்க்குள்ளிருக் கும் பாதரஸம் பொங்கி மேலே ஏறும். சூட்டின் அளவுக்கு ஏறும். இதைக்

கொண்டு சுரத்தின் வேகத்தை சரியாக வைத்தியர்கள் அளந்து தெரிந்து கொள்ளுவார்கள். ஆரோக்கிய நிலையில் எல்லாருடைய உடம்பும் ஒரே அனல்பதன் காட்டும். இது ஒரு ஆச்சரியமான விஷயம். அதற்கு மேல் கொஞ்சம் ஏறினாலும் சுரம்.

விவசாயம்

பாடு பட்டால்தான் விவசாயம் பயன் தரும். ஒரு நிலத்தைப்போல் ஒரு நிலம் இல்லை. ஒவ்வொரு மண்ணில் ஒவ்வொரு பொருள் நன்ருக விளையும். வண்டல் பூமி யில் நெல் நன்ருக விளையும். கரிசல் நிலம் பருத்தி, சோளம், கோதுமை இவைகளுக்கு ஏற்றது. செவ்வல் நிலத்தில் சாதாரண புஞ்சை தான்யங்களும் கடலைக்கொட்டை யும் நன்ருக விளையும். மணல் பூமியில் தென்னை, பனை, சவுக்குமரம் இவை நன்ருக வளரும்.

மனிதனுக்கு வியாதிகள் இருப்பது போல் பயிர்களுக்கும் வியாதிகள் உண்டு. வியாதிபட்ட பயிர்களை அடியோடு அழித்து விடவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த மகசூலும் கெட்டுவிடும்.

ஒரு நிலத்தில் எப்பொழுதும் ஒரே பயிரை சாகுபடி செய்தால் நிலத்தின் சாரம் குறைந்து போகும். பயிர் மாற்றிச் சாகுபடி செய்வது நலம்.

தன் நிலத்தின் தன்மையை அறிவது குடியானவனுக்கு அவசியம். சொந்த அனுபவத்தோடு விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களிடம் கேட்டும் அறிந்து கொள்ள வேண்டும். விவசாயத்தையே ஒரு படிப்பாகச் சொல்லித்தர, கோயமுத்தூரில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் நடத்துகிறுர்கள். அதில் படித்துத் தேர்ந்தவர்கள் விவசாய இலாகாவில் உத்தியோகம் பார்க்கிறுர்கள்.

விதை கலப்பில்லாமலும் சத்துள்ளதாகவும் இருக்கவேண்டும். விதைக்காகவே தனியாகப் பயிர் செய்வது நல்ல முறை. அதில் கலப்புப் பயிர்களைக் கவனித்துப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். வியாதி பட்ட பயிரிலிருந்து விதை எடுக்கலாகாது.

ஒரு ஊரிலிருப்பவர்கள் கூட்டாக விதை தயார் செய்துகொள்ளலாம். அல்லது சிலர் சேர்ந்து நல்ல விதை பயிர் செய்து மற்றவர்களுக்கு விலைக்குக் கொடுக்கலாம்.

விதைக்கென்று வைத்திருக்கும் தானியத்தை என்ன கஷ்டம் வந்தாலும் விற்றுவிடக் கூடாது. பெற்ற பிள்ளையைப்போல் அதை மதித்துக் காப்பாற்றவேண்டும். தானியம் நன்ருகக் காய்ந்தபிறகுதான் விதைக்கு எடுத்து வைக்கவேண்டும். ஈரம் கூடாது. பூச்சிவர விடக்கூடாது.

விதையை வயலில் மிதமிஞ்சித் தெளிப்பதில் பிரயோஜனமில்லை. வீண் நஷ்டம்.

॥

பயிரானது மண்ணிலிருந்து சத்து உறிஞ்சிக் கொள்ளுகிறது. அதை ஈடு செய்யாவிட்டால் நிலத்தின் வளம் குறைந்து போகும். ஒவ்வொரு அறுவடைக்குப் பிறகும் வயலுக்கு உரம் போடவேண்டும்.

நமக்கு வேண்டாதனவெல்லாம் வயலுக்கு நல்ல எருவாகும். சீனுவிலும், ஜப்பானிலும் மலத்தைப் பொன்னுகக் கருதி சேகரித்துவைத்து வயலில் போடுகிருர்கள். மாட்டின் சாணி மட்டுமல்ல, மூத்திரமும்

உயர்ந்த எருவாகும். எதையும் வீணுக்க லாகாது. மாடு கட்டும் இடங்களில் மணலை யும் வைக்கோலையும் நன்ருகப் பரப்பி அவை களை தினசரி குப்பைக் குழியில் சேர்க்க வேண்டும். குப்பையில் அதிக வெயில் படா மலும் தண்ணீர் தேங்காமலும் இருந்தால் நல்லது. பச்சைத் தழைகள் நல்ல உரம். அவைகளைச் சேர்த்து, குப்பைக் குழியில் போடவேண்டும்.

௴

புண்ணுக்கு மிக நல்ல உரம். எள், கடலை, கொட்டை முத்து, வேப்பங் கொட்டை முதலிய புண்ணுக்குகள் மிகவும் நல்லது. எலும்புத் தூள் மேன்மையான உரம். எலும்பை அசுத்தமென்று ஒதுக்கு வது சரி. ஆனல் அதை வீணுக்கக்கூடாது. எருவாக்கி உபயோகிக்க வேண்டும்.

இயற்கை உரங்களைத் தவிர ஆலைகளில் செய்யப்பட்ட உரங்களையும் வாங்கி உபயோ கிக்கலாம். ஆனல் இயற்கை உரங்களே மேலானவை.

கைத்தொழில்

விவசாயமும் கிராம கைத்தொழில்களும் செழிக்காமல் போனால் நாம் கெட்டுப் போவோம்.

உணவுக்குப் பிறகு உடுக்கத் துணி நமக்கெல்லாம் மிக்க அவசியமானது. உடைக்கு வேண்டிய துணியை கிராமத்திலேயே நெய்துகொண்டால் ஏழைக் குடும்பங்களுக்குத் தொழில் உண்டாகும். ஒழிந்த நேரங்களில் குடியானவர்கள் நூல் நூற்க வேண்டும். அந்த நூலை நெசவுக்காரனிடம் கொடுத்து, துணி நெய்துகொள்ளலாம். சீமைத் துணி வாங்கிக் கட்டுவதில் பணம் வீணாகிறது.

॥

வீடு கட்டுவதற்கும், கலப்பை பண்ணுவதற்கும், வண்டி சீர் செய்வதற்கும், இராட்டை பழுது பார்ப்பதற்கும், தச்சன் அவசியம். உள்ளூர்த் தச்சனுக்கு வேலையும் சரியான கூலியும் இல்லாமல் போனால் ஊரை விட்டுப் போய்விடுவான். பிறகு அவசரத்

திற்குத் தச்சன் கிடைக்கமாட்டான். கொத்தனும் அப்படியே.

சமையல் செய்வதற்குப் பித்தளைப் பாத்திரங்களைவிட மண் பாண்டங்களை உபயோகப்படுத்துவது மேலானது. ஊர்க் குயவனை ஆதரிக்கவேண்டும். அப்படியே ஊரிலுள்ள கொல்லன், தட்டான், பாய் முடைபவன், கயிறு திரிப்பவன், கூடை பின்னுகிறவன் முதலிய தொழிலாளர்களையும் ஆதரிக்க வேண்டும்.

அந்நிய நாட்டுச் சாமான்களை வாங்கி உள்ளூர்த் தொழிலாளிகளைப் பட்டினி போடுவது பெரிய தப்பு.

❖

தொழில் செய்பவனுக்குத் தகுந்த கூலி கொடுக்கவேண்டும். தொழில் செய்பவனும் மனம் செலுத்தி மோசமில்லாமல் வேலை செய்யவேண்டும். மேல்பார்வை இல்லாமல் யோக்கியமாக வேலை செய்யும் வழக்கம்

நமக்கெல்லாம் ஏற்படவேண்டும். அப்போது தொழிலுக்குத் தகுந்த கூலியும் ஏற்படும். எந்தத் தொழிலிலும் இப்பொழுது மேல் பார்வைக்கு அதிக பணம் வீணுக செலவாகிறது. இதனுல் தொழிலாளிகள் நஷ்டப் படுகிருர்கள்.

இந்தியா

நமது தேசம் இந்தியா. பாரத தேசம் என்றும் ஹிந்துஸ்தான் என்றும் சொல்லுவதுண்டு. இந்தியாவுக்கு வடக்கு எல்லே இமாலய மலேத் தொடர். அது இங்கிருந்து 1500 மைல் வடக்கே இருக்கிறது, உலகத்திலுள்ள மலேகளிலெல்லாம் அது உயரமானது. இமயமலேயிலிருந்து கங்கை, ஸிந்து, யமுனே, பிரம்மபுத்திரா முதலிய பெரிய நதிகள் உண்டாகி ஓடுகின்றன. அந்த நதிகளின் கரைகளில் செழிப்புள்ள நாடுகளும் பல பெரிய நகரங்களும் இருக்கின்றன.

இந்தியாவின் வடக்கு எல்லே இமய மலே. மற்றப் பக்கங்களில் கடல். கல்கத்தா, சென்னே, பம்பாய், கராச்சி இவை பெரிய துறை முகங்கள். வியாபாரக் கப்பல்கள் இந்தத் துறை முகங்களில் சரக்குகள் ஏற்ற வும் இறக்கவும் செய்யும்.

தமிழ் நாடு

நாமிருக்கும் தமிழ் நாடு இந்தியாவின் தெற்குக்கோடி. இந்தியாவின் தென் பாகத் தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலேயாளம், இந்த பாஷைகள் பேசுகிறோம். வடக்கே அநேகமாக ஹிந்துஸ்தானியும் அதைச் சார்ந்த வேறு சில பாஷைகளும் பேசுகிறார் கள்.

சென்னே மாகாணத்தில் வடக்கு ஜில் லாக்கள் தெலுங்கு தேசம். தெற்கே தமிழ் நாடு. சென்னபட்டணம் ஒரு பெரிய நகரம். அங்கே சென்னே மாகாண சர்க்காரின்

தலைமை உத்தியோகஸ்தர்கள் இருந்து வேலை பார்க்கிறார்கள்.

॥

தமிழ் ஜில்லாக்கள் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நீலகிரி.

நமிழ் நாட்டின் முக்கிய நதிகள் காவேரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை, தாம்பரபரணி. காவேரி குடகு நாட்டில் உற்பத்தியாகி, மாயவரத்திற்கு அருகில் கடலில் சேருகிறது.

தமிழ் நாட்டில் பல கோயில்களும் அழகான ஊர்களும் இருக்கின்றன. காஞ்சீபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம், பழனி, மதுரை, ராமேசுவரம், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், கும்பகோணம், வில்லிபுத்தூர், இன்னும் பல உண்டு.

தமிழ் நாடுப் பல்லாயிரம் வருஷங்களாக நாகரீக மடைந்த நாடு. முன் காலத்தில் மூன்று பாகமாக பிரிவுபட்டிருந்தது. வட பாகம் சோழ நாடு. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் பாண்டிய நாடு. திருவனந்தபுரம், கோயமுத்தூர், சேலம், மலையாளம், இவை சேர நாடு.

சேர சோழ பாண்டிய அரசர்களுக்குப் பின், நானூறு வருஷங்களுக்கு முன்வரையில் தமிழ் நாட்டை விஜய நகரத்து அரசர்கள் தெய்வபக்தியும் தேசபக்தியும் கொண்டு நியாயமாக அரசு புரிந்தார்கள். பிறகு பாளையக்காரர்கள் அல்லது சிற்றரசர்கள் மதுரை முதலிய இடங்களில் அரசாங்கம் நடத்தி வந்தார்கள். அதன் பிறகு, மகம்மதிய நவாபுகள் தமிழ் நாட்டை ஆண்டார்கள். அவர்களுக்குப்பின் ஆங்கிலேயருடைய ஆதிக்கம் வந்தது.

சென்ற 150 வருஷங்களாக இந்தியா முழுதுமே ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்குள்

இருந்து வருகிறது. இனி நாமே நம்முடைய நாட்டைக் குடியரசு முறையில் சுதந்தரமாக நடத்திக்கொள்ள வேண்டும். கலகமில்லாமல் அமைதியாக நம்முடைய நாட்டை நாமே ஆள ஆரம்பிக்கவேண்டும்.

அரசாங்கம்

அரசாங்கம் இல்லாமல் ஜனங்கள் வாழ முடியாது. கலகம் கொள்ளை முதலியன நடவாமல் தேசத்தை சரியாகக் காக்கவேண்டும். ஜனங்களுக்குள் ஏற்படும் வழக்குகள் நியாயமாகத் தீரவேண்டும். பொது நன்மைக்காகச் செய்யவேண்டிய பல காரியங்கள் உண்டு. அவை தனி ஆட்களால் செய்ய முடியாது. அதை யெல்லாம் கவனிக்க அரசாங்கம் வேண்டும்.

அரசாங்கம் நல்ல முறையில் நடத்தப்படா விட்டால் ஜனங்கள் கஷ்டப்படுவார்கள். குடிகளின் சம்மதத்தின் பேரில் நடக்

கும் அரசாங்கமே இந்தக்காலத்திற்குத் தகும்.

எல்லோரும் சேர்ந்தாப்போல் கும்பலாக அதிகாரம் செலுத்த முடியாது. அதற்காகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் நல்ல வழியில் அரசாங்கம் நடக்கும்.

பத்திரிகைகள்

பத்திரிகைகளைப் படித்தால் உலகத்தில் நடக்கும் சமாச்சாரங்கள் தெரியும்.

பத்திரிகைகளிலாவது புத்தகத்திலாவது சொன்னதெல்லாம் உண்மை என்று எடுத்துக்கொண்டு விடக்கூடாது. விவேகத்தை உபயோகித்து எது பொய் எது உண்மை என்று ஆராய்ந்தே முடிவுக்கு வரவேண்டும். பத்திரிகைகளில் விளம்பரங்கள் நிறைய இருக்கும். வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விளம்பரம் செய்துகொள்வார்கள். அதைப் படித்து ஏமாந்து போகக்

கூடாது. நல்ல சரக்கு எது, அது எங்கே கிடைக்கும் என்று அறிந்துகொள்ள விளம்பரங்கள் உபயோகப்படும். ஆனால் நம்முடைய விவேகத்தை உபயோகித்து எது நல்ல சரக்கு, எது ஏமாற்றம் என்று கண்டுகொள்ளவேண்டும். போடும் விளம்பரங்களுக்கெல்லாம் பத்திரிகை நடத்துகிறவர்கள் பொறுப்பு இல்லை. பணம் பெற்றுக்கொண்டு, வியாபாரிகள் எழுதிக் கொடுக்கிறமாதிரி அச்சிடுவார்கள். பத்திரிகை படிக்கும்போது எது விளம்பரம், எது விஷயம் என்று பிரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். விஷயத்திலும் எது தவறு, எது உண்மை என்று ஆலோசித்து அறிந்துகொள்ளவேண்டும்.

தேர்தல்கள்

தேர்தல்களில் பணத்திற்கும் தாட்சணியத்திற்கும் ஆதரவுச் சீட்டு போடக்கூடாது. யோக்கியமாக நடப்பவர்களுக்கே ஆதரவு கொடுக்க வேண்டும். யாரையாவது கண்டு

பயந்தோ அல்லது லஞ்சம் பெற்றுக் கொண்டோ, அல்லது கண்ணை மூடிக் கொண்டு யோசனை யில்லாமலோ, பெட்டியில் ஆதரவுச் சீட்டு போடுவது ஊரைக் கெடுத்த பாவமாகும். தேர்தலுக்குமுன் பொதுக் கூட்டங்கள் கூடி விஷயங்களை ஆலோசித்து, தைரியமாகவும் நியாயமாகவும் ஆதரவுச் சீட்டுகள் போடும் வழக்கம் ஏற்பட்டால்தான் நாம் சரியான அரசாட்சி அடைவோம்.

சீட்டைப் பெற்று அரசாங்க சபைகளுக்குப் போகிறவர்கள் தைரியமாகவும், விவேகமாகவும், யோக்கியமாகவும் காரியங்களை நடத்தவேண்டும். மக்களின் பொது நன்மையையே எப்போதும் கவனித்து வரவேண்டும். சிலருடைய ஆதரவைப் பெறுவதற்காகப் பலருக்கு நஷ்டம் உண்டாகும் காரியங்களை அவர்கள் செய்யக்கூடாது. துஷ்டர்களைக் கண்டு பயப்பட்டு நியாயத்திற்கு விரோதமாக எதுவும் செய்யக்கூடாது.

குடியரசு

குடிகள் தேர்ந்தெடுத்த பிரதி நிதிகளைக் கொண்டு அரசாங்கம் நடைபெற்று வந்தால் அதற்குக் குடியரசு என்று பெயர். நன்மை தீமை லாப நஷ்டம் எல்லாம் யோசித்து எப்படிப் பெரும்பாலோர் முடிவு செய்கிறார்களோ அதை மற்றவர்கள் சமாதானமாக ஒப்புக்கொண்டால்தான் குடியரசு நடைபெறும். இல்லாவிட்டால் கலகங்களும் குழப்பங்களும் உண்டாகி பலாத்காரம் தலையெடுத்து யாராவது சிலர் எதேச்சாதிகாரம் நடத்துவார்கள். அப்போது அனைவரும் சுதந்திரம் இழந்து விடுவார்கள். வாழ்க்கையானது நரகம் போலாகும்.

அரசாங்கத்தை நான்கு பாகங்களாகப் பிரித்துக் கொள்ளலாம். (1) சட்டங்களைச் செய்யவும், யார் மந்திரிகளாக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கவும் சட்டசபை வேண்டும். (2) அரசாங்கக் காரியங்களை இடைவிடாமல் கவனித்து நடத்திவர ஒரு

மந்திரி சபை வேண்டும். (3) வழக்குகளைத் தீர்க்கும் கோர்ட்டுகள் வேண்டும். (3) மந்திரி சபை தீர்மானித்த காரியங்களை நிறைவேற்ற உத்தியோகஸ்தர்கள் வேண்டும்.

ஒவ்வொரு சட்டமும் விவாதம் செய்யப்பட்டுக் கடைசியில் பெரும்பாலோரின் இஷ்டப்படி சட்ட சபையில் முடிவு செய்யப்படும். அபிப்பிராயங்களெல்லாம் தடையில்லாமல் சொல்லி வாத விவாதம் செய்து தீர்மானித்தபின், தீர்மானித்த சட்டத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டு நடத்தவேண்டும். ஆட்சேபித்தவர்களுங்கூடக் கீழ்ப்படிய வேண்டும்.

இம்மாதிரி நடந்து கொண்டால்தான் குடிகளின் பிரதிநிதிகள் குடிகளின் க்ஷேமத்திற்காக ஒழுங்காக வேலை செய்ய முடியும். நாட்டில் அமைதியும் நல்ல அரசாட்சியும் நிலையாக நிற்கும்.

வழக்குகள்

வழக்குகள் தீர்மானிப்பதற்காகக் கோர்ட்டுகள் வேண்டும். வழக்குகள் நியாயமாகத் தீர்க்கப்படவேண்டும். சட்டங்களையும் மனிதர்களுடைய சுபாவங்களையும் நன்ருக அறிந்த யோக்கியர்கள் நீதிபதிகளாக அமர வேண்டும். அவர்கள் இருபக்கத்தில் சொல்லப்படும் விஷயங்களையும் கவனித்துத் தீர்ப்புச் சொல்லுவார்கள். அதை இருபக்கத்தாரும் ஒப்புக்கொண்டு சமாதானமாக வாழ வேண்டும்.

நாமனைவரும் நியாயாதிபதிக்கு உதவி செய்யவேண்டும். பயமாவது தாட்சணியமாவது இல்லாமல் உண்மையைச் சொல்வதற்கு சாட்சிகள் முன்வரவேண்டும். பொய் சாட்சியம் சொல்வது கொலைபாதகத்தைவிடப் பெரிய பாவம். "எனக்கு என்னத்திற்கு இந்தத் தொல்லை" என்று உண்மையை மறைத்துவிடக் கூடாது. பணத்திற்குப் பொய் சாட்சியம் சொல்லக் கூடாது. வீண் வழக்குகள் தொடரக்கூடாது.

வரிகள்

வரிப்பணம் வசூல் செய்யாமல் அரசாங்கம் நடத்த முடியாது. ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்டசபையில் விதிக்கப்பட்ட வரிகளை அனைவரும் சரியான காலங்களில் செலுத்தினால்தான் அரசாங்கம் சரியாக நடைபெறும். அவரவர்கள் கொடுக்க வேண்டிய வரி என்ன என்று அறிந்து கொண்டு, கொடுத்துவிட்டு, கொடுத்ததற்கு ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

உத்தியோகஸ்தர்கள்

போலீஸ்காரர்கள் ஊருக்குக் காவல். பலசாலிகளும் மோசக்காரர்களும் மெலிந்தவர்களுக்குத் தொந்தரவும் நஷ்டமும் பயமும் உண்டாக்காமலிருக்கப் போலீஸ்காரர்கள் அவசியம். ஊரில் சண்டை சச்சரவு இல்லாமல் இருக்கவேண்டுமானால் போலீஸ்காரர்களுக்கு எல்லாரும் உதவி செய்யவேண்டும். குறைந்த சம்பளம் வாங்கினாலும் போலீஸ்

காரர்கள் மிகவும் யோக்கியர்களாக இருக்க வேண்டும். யோக்கியர்களே போலீசில் சேர வேண்டும். அவர்களுக்கு ஊரிலுள்ள எல்லாரும் உதவி செய்யவேண்டும்.

௱

நீர்ப்பாசனம், கல்வி, விவசாயம் முதலிய இலாகா உத்தியோகஸ்தர்கள் குடிகளின் நன்மைக்காக அமைக்கப்பட்டிருக்கிறார்கள். குடிகளின் ஒத்துழைப்பால்தான் இந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலையைச் செய்ய முடியும். உத்தியோகஸ்தர்களிடம் குடிகள் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லும் புத்திமதிகளைக் கேட்கவேண்டும்.

குடிகள் எல்லாருக்கும் சேர்ந்து பொதுவாகவும் பாரபட்சமில்லாமலும் வேலை செய்ய உத்தியோகஸ்தர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு ஒருவன் சொந்த லாபம் பெறுவதற்காக அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி செய்யக் கூடாது. அவர்களைக்கண்டு அஞ்ச

வேண்டியதில்லை. அவர்களை அவமதிக்கவும் கூடாது. அவர்களுக்கு வேண்டிய ஆதரவு கொடுத்து தைரியமாக அவர்களிடம் விஷயங்களை எடுத்துச் சொல்லவேண்டும்.

பொதுநலம்

உண்மை பேசுவதும், பேசியபடி செய்வதும் வீரனுக்கு அடையாளம். எந்த மனிதனும் தனியாக சுகமடைய முடியாது. சமூகம் செழித்தால்தான் தன் குடும்பமும் செழிக்கும். ஆதலால் பிறர் சுகத்தையும் கவனித்து வாழவேண்டும்.

ஊர் நன்றாக இருந்தால் எல்லாருக்கும் நல்லது. ஒவ்வொருவரும் குடும்பத்திற்கு உழைப்பதுபோல் ஊருக்கும் உழைக்கவேண்டும். இதுவே நல்ல குடித்தனத்திற்கு அடையாளம். ஊருக்கு நல்லது எனக்கும் நல்லதே என்று எல்லாரும் நடந்துகொள்ள வேண்டும்.

